**எல்ல பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாடுகள் தொடர்பான கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் எல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டின் போது வேலை பூர்த்தி செய்யப்பட்ட ரூபா 33,652,262 தொகை கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | எதிர்வரும் ஆண்டின் போது சரிசெய்யப்படும். | சரியாக கணக்குகள் தயாரிக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | கடந்த ஆண்டின் போது உடைத்து அகற்றப்பட்ட எல்ல பொலிஸ் வீதி 05 கடைகள் ரூபா 6,500,000 மதிப்பீட்டுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது சபை உறுப்பினர் படி மற்றும் தொலைபேசி படியாக மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 74,323 தொகை கிடைக்க வேண்டிய மீதியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டிற்குரிய செலுத்த வேண்டிய பிரயாணச் செலவினம், மேலதிக நேரப்படி மற்றும் கூற்றிணைந்த இணைந்த படிகள் ரூபா 111,742 செலுத்த வேண்டிய மீதியொன்றாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 02 சொத்து விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்ட மீதிக்கும் பட்டோலைகளின் மீதிகளுக்கும் இடையே ரூபா 2,267,931 வேறுபாடு காணப்பட்டது. | சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியான மீதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் நிதிக்கூற்றில் ஆரம்ப காணி மற்றும் கட்டட மீதி பட்டோலைகளின் பிரகாரம் ஆரம்ப மீதிக்கும் இடையே ரூபா 73,856,183 வேறுபாடு காணப்பட்டது. | - மேற்படி - | - மேற்படி - |

**1.6.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது பேரேட்டில் சீராக்கப்பட்ட கூட்டுப்பெறுமதி ரூபா 348,759 இன் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக இனங்காணப்பட்ட பிழைகள் அல்லது குறைபாடுகளை தெளிவாக்குகின்ற பட்டோலைகள் அல்லது அறிக்கைகள் கணக்காய்விற்கு சமர்பிக்கப்படவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | பிழைகளை சரி செய்வதற்கு உரிய குறிப்புக்கள் சரியாக பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| (ஆ) | கூட்டுப்பெறுமதி ரூபா 95,882,634 ஆன 07 சொத்து விடயங்களின் மீதிகளை உறுதிப்படுத்துவதற்காக வேலை பூர்த்தி அறிக்கை, உரித்தை உறுதிப்படுத்தும் கடிதம், மதிப்பீட்டு அறிக்கை, உபயோக பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் சமர்ப்பிக்காமையின் காரணமாக திருப்திகரமாக சான்றுகளை பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது. | - மேற்படி - | ஆவணங்கள் மற்றும் பட்டோலைகள் சரியாக பேணி சென்று சரியாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படல் வேண்டும். |

**1.7 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை.**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் | | | |
| (i) | 23 மற்றும் 24 (1) ஆம் | சபைக்குரிய வீதிகள் அடையாளம் இடல் | நிலையான மற்றும் | உரிய பணிகளை பிரதேச சபை விரைவாக சட்டத்தின் பிரகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | பிரிவு | எல்லைகளை அடையாளம் இட்டு திட்டம் தயாரித்து அந்த வீதிகள் மற்றும் சிறு வீதிகளின் பெயர் பதிவேடொன்றைக் காண்பித்து அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிறைவேற்றப்படும். | நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 122 ஆம் பிரிவு | பிரதேச சபையின் அதிகாரத்தை பயன்படுத்துதல் மற்றும் பொறுப்புடன் நிறைவேற்றும் பணிகளுக்காக தேவையான உப விதிகள் தயாரிக்க இருந்த போதிலும் சபை எல்லையில் பேணிச் செல்லப்பட்ட 11 நிலையங்களை முறைமை படுத்துவதற்கு உப விதிகள் தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஆ) | பிரதேச சபை 1988 இன் பிரதேச சபைகள் நிதி மற்றும் நிர்வாக (நிதி கோவை) 218 ஆவது விதி | சகல காணிகள் மற்றும் கட்டடங்களை மெய்மையாய்வு சபை மூலம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | -மேற்படி- | நிதி மற்றும் நிர்வாக கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 13,419,693 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய மீண்டெழும் செலவினம் ரூபா 4,873,204 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கும், முன்னைய ஆண்டிற்கும் உரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப்ப ட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **(i)** | ஆதன வரி | 13,023,163 | 18,336,140 | 11,178,623 | 7,157,517 | 8,755,800 | 8,192,102 | 4,332,323 | **3,859,779** |
| **(ii)** | வாடகை | 2,298,000 | 3,146,065 | 2,655,225 | 490,840 | 900,000 | 952,285 | 489,529 | **462,756** |
| **(iii)** | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,806,000 | 2,014,950 | 2,014,950 | 0 | 1,572,200 | 985,000 | 985,000 | **0** |
| **(iv)** | ஏனைய வருமானம் | 8,940,000 | 6,321,328 | 6,275,978 | 45,350 | 17,767,000 | 17,022,080 | 6,163,800 | **10,858,280** |
| | மொத்தம் | **26,067,163** | **29,818,483** | **22,124,776** | **7,693,707** | **28,995,000** | **27,151,467** | **11,970,652** | **15,180,815** |

**2.2.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்**

சபையின் வருமான சேகரித்தலின் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 1877 ஆதனவரி அலகுகளில் இருந்து அறவிடவேண்டிய ரூபா 17,397,290 ஆதனவரி அறவிடப்படாதிருந்ததுடன் நிலுவை ஆதனவரி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தில் 158 மற்றும் 166 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவை வரி செலுத்தாத நபர்களுக்காக சட்ட ரீதியான நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை ஆதனவரி அறவிடப்படல் வேண்டும். |
| (ஆ) | 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்ற நிலுவை கடை வாடகை ரூபா 425,721 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2023 செப்டெம்பர் மாதத்தின் போது சட்ட ரீதியான நடவடிக்கைகள் ஒரு கடை உரிமையாளருக்கு எடுக்கப்பட்டுள்ளது. | உடன்படிக்கையின் பிரகாரம் நிலுவைக் கடை வாடகை அறவிடப்படல் வேண்டும். |
| (இ) | 03 வருடங்களுக்கு மேற்பட்ட காலத்தில் இருந்து கொண்டு வரப்படுகின்ற நிலுவைநீர்க்கட்டணம் ரூபா 1,022,490 மீளாய்வாண்டின் போதும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை அறிவித்தல் விநியோகிக்கப்பட்டுள்ளது . நடமாடும் சேவை நடாத்தி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிலுவை வருமானம் அறவிடப்படல் வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 6,547,100 மற்றும் முத்திரை கட்டணம் ரூபா 15,960,678 அறவிடப்பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 சட்டத்தினால் கையளிக்கப்பட்ட பணிகளை நிறைவேற்றுதல்

பிரதேச சபைகள் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**பொது வீதிகள் பராமரிக்கப்படாமை.**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் பிரதேச சபைக்குரிய வீதிகளை அபிவிருத்தி செய்தல் சபையின் பணியாக இருந்த போதிலும் எல்ல நகரத்திலிருந்து எல்ல பொலிஸ் நிலையத்திற்கு அருகில் வருகின்ற உப வீதி பயன்படுத்துவதற்கு வசதியீனமாக சேதத்திற்கு உட்பட்டிருந்த போதிலும் வீதியை அபிவிருத்தி செய்வதற்கு சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. | உள்ளூராட்சி அமைச்சின் நிதியேற்பாடு ஒதுக்கி வீதியை காப்பட் இடுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் பொது வீதிகள் அபிவிருத்தி செய்யப்படல் வேண்டும். |

### 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டின் போது சபை நிதியத்தின் மூலம் எல்ல சுற்றுலா விடுதியில் கீழ் மாடியில் ஒரு அறையில் குடியிருப்பு நடவடிக்கைகளுக்காக பொருத்தமான வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்ததுடன் 2019 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரையும் ரூபா 45,000 ஆகக் குறைந்த வருமானம் மாத்திரம் உழைக்கப்பட்டிருந்தது. | கட்டிடத்தை அபிவிருத்தி செய்து எதிர் காலத்தில் வருமானத்தை உழைப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது. | உரிய பணிகளை பூர்த்தி செய்து எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை எல்லையில் பேணிச் செல்லப்படுகின்ற 483 வியாபார நிலையங்களுக்காக 2023 ஆம் ஆண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெறப்படாமையின் காரணமாக சபைக்கு கிடைக்க வேண்டிய ரூபா 433,000 வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | நிரந்தர வருமான பரிசோதகர் இல்லாமை இதற்கான காரணமாக இருந்ததுடன் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உள்ளூராட்சி திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | சபையின் பணிப்பொறுப்புக்கள் சரியாக நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 122 ஆம் பிரிவின் பிரகாரம் மோட்டார் வாகனங்களை தரித்து வைக்கும் இடங்கள் தொடர்பாக உப விதி விதிக்கப்பட வேண்டி இருந்த போதிலும் ராவண எல்ல மற்றும் புகையிரத நிலையத்திற்கு அருகிலுள்ள வாகன தரிப்பிடங்கள் இரண்டிற்காக உப விதிகள் விதிக்கப்படாமல் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 3,243,690 வருமானம் அறவிடப்பட்டிருந்தது. | உப விதி வரைவு தயாரித்து உள்ளூராட்சி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்.**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பதுளை, பண்டாரவளை பிரதான வீதியில் கும்பல்வலயில் அமைந்துள்ள பழைய சபைக் கட்டிடம் எந்தவொரு பொருளாதார செயற்பாடுகளுக்காகவும் பயன்படுத்தப்படாமல் 2018 ஆம் ஆண்டு முதல் விளைவற்று காணப்பட்டது. | கட்டிடம் அபிவிருத்தி செய்யப்படுகின்றது. | கட்டிடத்தை ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஈடுபடுத்துதல் வேண்டும். |
| (ஆ) | சபையினால் பயன்படுத்தப்படுகின்ற பௌஸர், கெப் வண்டி, 02 டெக்டர்கள் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கையேற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் உரித்தை சபைக்கு கையேற்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

**3.4 ஒப்பந்த நிர்வாகத்தில் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் உடன்படிக்கை செய்யப்பட்டு நிர்மாணிக்கப்பட்ட எல்ல சுற்றுலா தகவல் நிலையம் 2016 ஆம் ஆண்டின் போது தேசிய கட்டடங்கள் ஆராய்ச்சி நிறுவனம் விநியோகித்திருந்த காணி நிறுமான அறுகதை சான்றிதழ்களின் பிரகாரம் போதியளவான தாங்கும் இயலளவுடன் மண் படையொன்றின் அடிப்படையில் கட்டிடத்தின் தூண்களின் அடி அமைக்கப்பட வேண்டியிருந்தமை பரிந்துரை செய்யப்பட்ட போதும் பௌதிக பரிசோதனையின் பிரகாரம் கட்டிடத்தின் அடித்தள வேலைப்பகுதி நிறைவேற்றப்படாமல் ரூபா 6,599,634 செலுத்தப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | மண்சரிவு ஆபத்துடனான பிரதேசமாக இருந்தமையால் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பரிந்துரையை பெற்று நிர்மாணிக்கப்படல் வேண்டும். |

(ஆ) மொத்த கிரய மதிப்பீடு ரூபா 6 மில்லியனை மிஞ்சிய எல்ல சுற்றுலா விடுதி கட்டட நிர்மாணம் 2017 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. நிர்மாணம் போட்டியாளர் கேள்வி கோரளின் அடிப்படையில் வழங்க வேண்டியிருந்த போதிலும் 03 கட்டங்களுக்கு ஒதுக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்திற்கு ஒப்பந்தம் கையளிக்கப்ட்டிருந்தது. இது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையின் போது பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| **(i)** | கட்டம் (I) இற்குரிய வேலை நிர்மாண கோவை தொலைந்து போயிருந்தமை கணக்காய்விற்கு அறிக்கையிடப்பட்டிருந்தது. அதன்பிரகாரம் நிர்மாணத்திற்குரிய அங்கீகரிக்கப்பட்ட பொறியியலாளர் திட்டம், கட்டிடத்திட்டம், அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடு, பெறுகை நடவடிக்கைகள், தேசிய கட்டட மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்திலிருந்து பெறப்பட்ட அறிக்கை, பூர்த்தி செய்யப்பட்ட நிர்மாணங்களின் செயல்முன்னேற்றம் மற்றும் கொடுப்பனவு விபரங்கள் தொடர்பாக உறுதிப்படுத்துதலை பெற்றுக் கொள்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | நிர்மாணங்களுக்கு கோவைகள் பேணிச் செல்லப்படல் வேண்டும். |
| **(ii)** | கட்டம் (II) இன் கீழ் கட்டிடத்தின் தரைமாடி மற்றும் மேலும் 02 மாடிகளை நிர்மாணிப்பதற்கு அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் ரூபா 1,894,795 உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. கட்டிடத்தின் முதலாவது மாடியில் தூண்கள் நிர்மாணித்தல் மற்றும் இரண்டாவது மாடியில் கொங்கிரீட் தட்டு (Slab) மாத்திரம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. | ஏற்றுக்கொள்கின்றோம். | திட்டத்தின் பிரகாரம் முறையாக வேலைகள் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். |
| **(iii)** | கட்டம் (III) இன் கீழ் 2017 ஆம் ஆண்டின் ஒக்டோபர் முதல் 2018 சனவரி வரையான காலத்தில் ரூபா 1,994,048 அங்கீகரிக்கப்பட்ட சங்கத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. அதில் நிறைவேற்றப்பட்ட வேலைப்பகுதிக்காக ரூபா 833,012 செலவிடப்பட்டிருந்ததுடன் நிர்மாண கோவையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்கின்றோம். | -மேற்படி- |

4 **கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும் சுற்றாடல் பிரச்சினை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபையினால் பேணிச் செல்லப்படுகின்ற கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையம் எல்ல பண்டாரவல பிரதான வீதிக்கு அருகில் காணப்பட்டதன் காரணமாக நகரத்திற்கு வருகை தருகின்ற உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகள் மற்றும் பொது மக்களுக்கு பல்வேறு வசதியீனம் மற்றும் இடையூறுகளுக்கு உட்பட்டிருந்தனர். | 2025 ஆம் ஆண்டில் COICA செயற்திட்டம் மூலம் அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. | கழிவுப் பொருள் முகாமைத்துவ நடவடிக்கைகளை முறையாக மேற்கொள்ளுதல் வேண்டும். |